இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 01.11.2026

கலையரசன் கைதும் த.வெ.க.வின் பாசிசமும்

தற்குறிகளின் உலகத்துக்கு வேண்டுமானால் கலையரசனைத் தெரியாமல் இருக்கலாம். அறிவுலகம் அவரை அறியும். சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர். இந்தியாவின் தலைசிறந்த டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். 'The Dravidian Modal' நூலின் ஆசிரியர். "தமிழ்நாட்டில் விலைவாசி எகிறி வருகிறது" என்று பேட்டி கொடுத்த காரணத்துக்காக வேட்டையாடி இருக்கிறது த.வெ.க. அரசு.

அவர் நடத்தப்பட்ட விதம் அச்சம் தருவதாக உள்ளது. மாநிலம் எத்தகைய மாஃபியாக்களின் கையில் சிக்கி இருக்கிறது என்பதற்கு கலையரசன் விவகாரம் ஒரு எடுத்துக்காட்டு.

கலையரசனை அதிகாலை ஐந்து மணிக்கு வீடு புகுந்து தூக்க வந்தவர்கள் யார் என்று தெரியாது. அவர்கள் எந்தச் சீருடையும் அணிந்திருக்கவில்லை. அவர்கள் எந்தக் காவல் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரியாது. வந்தவர்கள் போலீஸா, அல்லது த.வெ.க. இதற்கென வளர்த்து வரும் ஆட்களா எனத் தெரியவில்லை. போலீஸ் வாகனத்தில் வரவில்லை. தனியார் வாகனத்தில் வந்திருக்கிறார்கள். வந்த காரணமும் சொல்லவில்லை. கலையரசனை அழைத்துச் சென்றுள்ளார்கள். இரண்டரை மணி நேரம் காரில் வைத்து சுற்றிவிட்டு அவரை எங்கிருந்து ஏற்றிக் கொண்டார்களோ அங்கேயே கொண்டு போய் விட்டுள்ளார்கள்.

இப்படி யார் செய்வார்கள்? பிளாக் மெயில் தொழில் நடத்துகிறவர்கள் செய்வார்கள். குழந்தைக் கடத்தல்காரர்கள் செய்வார்கள். இப்படி ஒரு அரசாங்கம் செய்திருக்கிறது. ஆம், அமைச்சர் நிர்மல் குமார் ஒப்புக் கொண்டு இருக்கிறார்.

ஐந்து ஆண்டுகளில் ஐந்து கட்சி மாறிய அமைச்சர் நிர்மல் குமார் சொல்கிறார்... 'போலீஸ் ஸ்டேஷனில் தவறு நடந்து விட்டது' என்று. எந்த போலீஸ் ஸ்டேஷனில் தவறு நடந்தது? தவறு செய்தவர்கள் யார்? தவறு செய்யச் சொன்னவர்கள் யார்?

திடீரென்று புகுந்து ஒரு ஆய்வாளரை, எழுத்தாளரை, விமர்சகரை - அதிகமாக ஆங்கிலத்தில் எழுதி தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றை உலகம் முழுக்க கொண்டு சேர்க்கும் ஒருவரைக் கடத்திச் செல்லும் அளவுக்கு அவரது புத்தகத்தில் எதையாவது குறைகண்டு பிடித்துவிட்டாரா அந்த போலீஸ்காரர்? அல்லது நிர்மல்குமார்? அல்லது விஜய்?

சாதாரணமாக ஒரு ஸ்டேஷன் இன்ஸ்பெக்டரோ, சப் இன்ஸ்பெக்டரோ, ஏட்டையாவோ நினைத்தால் இதைச் செய்து விட முடியுமா? ஏ.சி.; டி.சி., நினைத்தால் கூட இதைச் செய்ய முடியுமா? முடியாது.

கலையரசன் மீது அம்பை ஏவச் செய்தது யார்? அதைச் சொல்லுங்கள். அவர் செய்த குற்றம் என்ன?

பல்லாவரம் எம்.எல்.ஏ. காமாட்சி பற்றி தவறான பதிவு போட்டாராம். சொல்கிறார் அமைச்சர் நிர்மல்குமார். 'கலையரசன் படமும் பேரும் இருந்தது' என்று நிர்மல்குமார் சொல்வதே பொய். அந்தப் பதிவில் கலையரசன் படம்தான் இருந்தது. பெயர் இல்லை. கலையரசன் படத்தை வைத்திருக்கும் யாரோ ஒருவர் இப்பதிவு போட்டுள்ளார் என்றே வைத்துக் கொள்வோம். அதற்கு கலையரசன் எப்படி பொறுப்பு ஆவார்? 'கலையரசன் பெயர் இருந்தது' என்று பச்சைப் பொய்யை கூசாமல் சொல்கிறார் நிர்மல். 'விஜய மணிகண்டன்' என்ற பெயர்தான் அதில் இருக்கிறதே தவிர, கலையரசன் என்ற பெயர் இல்லை.

விஜய் படத்தைப் போட்டு ஆபாசப் பதிவுகள் போடுகிறவர்களுக்கு பொறுப்பேற்றுக் கொள்வாரா விஜய்? இதற்கு லட்சக்கணக்கான ஆபாசப் பதிவுகளை ஆதாரமாகக் காட்டலாம்.

கலையரசன் பெயரைப் பயன்படுத்தி போலியான கணக்கு தொடங்கி, அவரைக் கைது செய்துள்ளார்கள் என்றும் சந்தேகிக்கத் தோன்றுகிறது.

பல்லாவரம் எம்.எல்.ஏ., காமாட்சி இது தொடர்பாக எந்தக் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்? அதுவுமில்லை. காமாட்சியை விடுங்கள். பாவம் அவர். அமைச்சர்கள் நிர்மல்குமாரையும் சரத்குமாரையும் இன்னும் பலரையும் விமர்சித்து சமூக வலைதளங்களில் வரும் பதிவுகளைப் பார்க்கவில்லையா? எத்தனை லட்சம் பேரை கைது செய்வீர்கள்? போதை வழக்கில், பாலியல் வழக்கில் ஒவ்வொரு த.வெ.க. ஆட்களும் சிக்கும் போது அதற்கான பின்னூட்டத்தைப் போய் பாருங்கள். எத்தனை லட்சம் பேரைக் கைது செய்வீர்கள்? 'வெற்றி ஜெயில்' தான் கட்ட வேண்டும்.

"வீட்டிலிருந்து காரில் ஏற்றிச் சென்று பல்லாவரம் அருகே காரை நிறுத்தி முக்கால் மணி நேரம், செல்போனில் யாரிடமோ பேசினார்கள். அதன் பின்னர் என்னை வீட்டில் இறக்கிவிட்டனர். பாதிக்கப்பட்ட என்னை, குற்றவாளி போல நடத்தினர்" என்று சொல்லியிருக்கிறார் கலையரசன். அவரைக் குற்றவாளி போல நடத்தச் சொன்னது யார்? போனில் யாரிடம் பேசினார்கள் கடத்தல்காரர்கள். கலையரசனை அச்சுறுத்தச் சொன்னது யார்?

இதுதான் பாசிசம் ஆகும். தனது அரசியல் எதிரிகளை பாசிசம் இப்படித்தான் அச்சுறுத்தும். இது கைதை விட மோசமானது. கைது என்பதற்குச் சட்டரீதியான அங்கீகாரம் உண்டு. ஆனால் அதிகாலையில் தூக்கிச் சென்று இரண்டு மணிநேரம் எங்கோ வைத்து மீண்டும் கொண்டு வந்து விடுவது - கைது, சிறைச்சாலை என்பதை விட மிக மோசமானது.

'அவங்க பாசிசம் என்றால் நீங்க பாயாசமா?' என்பது விஜய்யின் புகழ்பெற்ற டயலாக். பாயாசமாகச் சொல்லி மக்களை ஏமாற்றி பாசிசத்தை பந்தி வைத்துக் கொண்டு இருக்கிறார் விஜய். அவரது ஆட்சியை, அவரை, அவரது அமைச்சர்களை விமர்சிப்பவர்கள் அனைவரையும் பாசிச வேட்டை தான் ஆடிக் கொண்டு இருக்கிறார் விஜய்.

இந்த விவகாரத்தில் மெய்சிலிர்க்க வைக்கும் கருத்தைச் சொல்லி இருக்கிறார் த.வெ.க. ஆதரவுக் கட்சியின் தலைவர் ஒருவர். 'அதிகாலை 5 மணிக்கு கைது செய்யுங்கள் என்று முதலமைச்சர் விஜய் சொல்லி இருக்க மாட்டார். எப்படி கைது செய்வது என்பது எல்லாம் காவல் துறை முடிவு செய்வதுதான். கும்பல் கூடக் கூடாது என்பதற்காக அந்த நேரத்தில் கைது செய்திருக்கலாம்' என்கிறார் அந்தத் தலைவர். இந்த நூற்றாண்டின் மனித உரிமைப் போராளி விருதை அந்தத் தலைவருக்குத் தரலாம். அமைச்சர் பதவிக்காக ஒரு ஆட்சியை ஆதரிக்கலாம். கெட்ட ஆட்டத்தை எல்லாம் இப்படியா ஆதரிப்பது?

இப்போது நடந்து கொண்டிருப்பது பாசிச ஆட்சி தான். விஜய் அப்பாவி அல்ல. எதுவும் தெரியாதவர் அல்ல. எல்லாத் தவறுகளும் அவருக்குத் தெரிந்தே நடக்கின்றன. சினிமாவை ரூட் மாஃபியா மூலம் ஆட்டிப்படைத்த அதே பாணியை அரசியலிலும் செயல்படுத்தி வருகிறார் விஜய்.

●●

ஜப்பானில் நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில்

15 பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டு வீரர் - வீராங்கனைகள்

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினுடன் சந்திப்பு!

பதக்கம் பெற்றவர்களுக்கு உதயநிதி ஸ்டாலின் பாராட்டு – வாழ்த்து தெரிவித்தார்!

சென்னை, நவ.1- ஜப்பானில் நடைபெற்ற 5-வது ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில், 15 பதக்கங்களை வென்று சாதனை படைத்த தமிழ்நாட்டு வீரர் - வீராங்கனைகள் - கழக இளைஞர் அணிச் செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



5-வது ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில், தமிழ்நாட்டைச் சேர்ந்த பாரா தடகள வீரர்-வீராங்கனைகள் தம் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, 3 தங்கம், 5 வெள்ளி, 7 வெண்கலம் என மொத்தம் 15 பதக்கங்களை வென்று, தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

இந்த சாதனையைத் தொடர்ந்து, தமிழ்நாடு பாராலிம்பிக் விளையாட்டு சங்கத்தின் (TNPSA) நிர்வாகிகள் மற்றும் பதக்கம் வென்ற வீரர்- வீராங்கனைகளான கஸ்தூரி ராஜாமணி, தர்மராஜ் சோலைராஜ், பேபி சஹானா ரவி, ஜே.டி.மதன், மனிஷா ராமதாஸ், நித்யஸ்ரீ சுமதி சிவன், துளசிமதி முருகேசன், சிவராஜன் சோலைமலை, நவீன் சிவகுமார், ருத்திக் ரகுபதி, சுதர்சன் முத்துசாமி, சரவணகுமார், சந்தியா விஸ்வ நாதன் மற்றும் ஹரீஸ் மைதிலி ஸ்ரீகுமார் ஆகியோர், கழக இளைஞர் அணிச் செய லாளரும் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து, தங்களது வெற்றிப் பயண அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

அப்போது, வீரர்-வீராங்கனைகளின் சாதனைகளைப் பாராட்டிய உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பதக்கம் வென்றவர் களுக்குத் தனது வாழ்த்துகளையும் பாராட்டு களையும் தெரிவித்ததுடன், அடுத்து வரும் போட்டிகளிலும் பல்வேறு சாதனைகளைப் படைக்க ஊக்கமளித்தார்.

இந்த சந்திப்பில், தமிழ்நாடு பாராலிம்பிக் விளையாட்டு சங்கத்தின் பொதுச்செயலாளர் கிருபாகர ராஜா மற்றும் இணைச் செய லாளர் இ.செந்தில்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முன்னாள் அமைச்சர் –

கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் இல்லத் திருமண விழா!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, நவ. 1- கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் - கழகப் பொதுச் செயலா ளர் துரைமுருகன் அவர்களின் பெயர்த்தி - டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி.யின் புதல்வி மணவிழாவை இன்று (நவ.1) காலை சென்னை, ஈ.சி.ஆர். சாலை, ஆர்.கே.கன்வென் சன் சென்டரில் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

இம்மணவிழா வரவேற்பு நேற்று (31.10.2026 - சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் நடைபெற்றது.



பசும்பொன் முத்துராமலிங்க தேவர் 119வது ஜெயந்தி விழா மற்றும் குருபூஜையை முன்னிட்டு கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற தி.மு.க. மக்களவை குழு தலைவருமான டி.ஆர்.பாலு எம்.பி., அன்னாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் தலைமை நிலைய செயலாளர் பூச்சி முருகன், செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கே.கே.நகர் தனசேகர், பகுதி கழக செயலாளர் நந்தனம் மதி மற்றும் கழகத் தோழர்கள் இருந்தனர்.

மணவிழாவில் கழக இளைஞர் அணி செயலாளர் - சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.

இம்மணவிழாவில் முன்னாள் அமைச்சர்கள், கழக முன்னணியினர் - மாவட்டச் செயலாளர்கள் - எம்.பி.க்கள் - எம்.எல்.ஏ.க்கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



இம்மணவிழா பற்றிய விவரம் வருமாறு:

கழகப் பொதுச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் துரை முருகன் - சாந்தகுமாரி துரை முருகன் ஆகியோரின் பெயர்த்தியும் டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. - சங்கீதா கதிர் ஆனந்த் ஆகியோரின் புதல்வி யுமான செந்தாமரைக்கும், திட்டக் குடி ரவிகண்ணன் - தீபா ரவி ஆகியோரின் புதல்வர் தீபக் ரவிக் கும் மணவிழா இன்று (1.11.2026- ஞாயிற்றுக்கிழமை) காலை 7.30 மணியளவில் சென்னை ஈ.சி.ஆர். சாலையில் அமைந்துள்ள ஆர்.கே.கன்வென்சன் சென்டரில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவை கழகத் தலை வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலை மையேற்று நடத்தி வைத்து மணமக் களை வாழ்த்துகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலா ளர் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர் கள் வரவேற்புரையாற்றுகிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக துணைப் பொதுச் செய லாளர் கனிமொழி ராஜாத்தி கருணா நிதி எம்.பி., முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. நன்றி கூறுகிறார்.

இம்மணவிழாவில் முன்னாள் அமைச்சர்கள், கழக முன்னணி யினர், சட்டமன்ற நாடாளுமன்ற இந் நாள்-முன்னாள் உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள் - கழக நிர் வாகிகள் கலந்து கொண்டு மணமக் களை வாழ்த்துகின்றனர்.



திருச்சியில் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் 119 ஆவது ஜெயந்தி விழாவை முன்னிட்டு மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு கழக முதன்மைச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் கே.என். நேரு அவர்கள் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் அருண் நேரு எம்.பி., மேயர் அன்பழகன், முத்து செல்வம், துரைராஜ், சித்ரா, பாரிவள்ளல், சுப்பிரமணி, விஜய், சேகர், குணசேகர், கண்ணன், மோகன்தாஸ், கமல், முஸ்தபா, மண்டி சேகர், இளங்கோ, சிவக்குமார், டி.ஆர். பாலசுப்ரமணியம், செல்வம், துர்கா தேவி, தர்மு சேகர், கவிதா, கலைச்செல்வி, கவிதா, சிந்தாமணி, பாலமுருகன், செந்தில், கார்த்திக், ஜெயச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.